# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு ஏப்.,13ல் சென்னையில் 'பிங்கத்தான்'

சென்னை, மார்ச் 27—

''புற்றுநோய் குறித்து பெண்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 'மியாட்' மருத்துவமனையுடன் இணைந்து, சென்னையில், ஏப்., 13ல், பெண்கள் பங்கேற்கும், 'பிங்கத்தான்' ஓட்டம் நடத்தப்படும்,'' என, நடிகர் மிலின் சோமன் தெரிவித்தார்.

சென்னை மியாட் மருத்துவமனையில், 'பிரெஸ்ட் பிரண்ட்ஸ் டே' என்ற, பெண்களுக்கான, பெண்கள் பங்கேற்ற நிகழ்ச்சி நடந்தது. 'பிங்கத்தான்' அமைப்பின் நிறுவனர், நடிகர் மற்றும் இயக்குனருமான மிலின் சோமன் தலைமை வகித்தார்.

அவர் பேசுகையில், ''பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய் குறித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஏப்.,13ம் தேதி, காலை, 5:30 மணிக்கு, 3 கி.மீ., 5 கி.மீ., 10 கி.மீ., என்ற நிலையில், 'பிங்கத்தான்' ஓட்டம் நடத்தப்படுகிறது. புற்றுநோய் இல்லாத சென்னையை உருவாக்க நாம் முனைப்புடன் செயல்பட வேண்டும்; பெண்கள் அனைவரும் இதில் பங்கேற்க வேண்டும்,'' என்றார்.



■ சென்னை மியாட் மருத்துவமனையில், 'பிரெஸ்ட் பிரண்ட்ஸ் டே' என்ற, பெண்களுக்கான, பெண்கள் பங்கேற்ற நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில், மார்பக புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு ஓவிய கண்காட்சி இடம் பெற்றது.

மியாட் இணை மேலாண் இயக்குனர் பிருத்வி மோகன்தாஸ் பேசுகையில், ''குடும்பம், அலுவலகம் மற்றும் சமுதாய பொறுப்புக்களிலும் சுயநலமின்றி, பெண்கள், தங்கள் உடல் நிலை பற்றி கவலைப்படாமல் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு, உடல் நலன் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவர்களுக்கு எங்களால் இயன்ற மருத்துவ பரிசோதனை தரவும் நாம் கூடியுள்ளோம்,'' என்றார்.

இதில், மியாட் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், பெண்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை கூப்பன்களை வழங்கினார். ஜியோத்ஸ்னா சின்னப்பா உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த பெண்களும் இதில் பங்கேற்றனர். புற்றுநோய் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பெண்களின் ஓவியக்கண்காட்சி, ஜப்பானின் தடுப்பாற்றல் கலை குறித்தும் செயல் விளக்கமும் செய்து காட்டப்பட்டது.